**CLASS: M.A. TAMIL** **15A / 330**

**St. JOSEPH'S COLLEGE (AUTONOMOUS) TIRUCHIRAPPALLI – 620 002**

**SEMESTER EXAMINATIONS – APRIL 2015**

**TIME: 40 Minutes** **MAXIMUM MARKS: 30**

| SEM | SET | PAPER CODE | TITLE OF THE PAPER |
|---|---|---|---|
| II | 2014 | 14PTA2106 | சங்க இலக்கியம் |

**பிரிவு – அ**

**அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக:** **30 x 1 = 30**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. 'நீ மாக்கடல் நிவந்தெழுதரு செஞ் ஞாயிற்றுக் கவின்' என்று பரணர் யாரைப் பாராட்டுகிறார்?
   அ) கரிகாலன் ஆ) இளஞ்சேட்சென்னி
   இ) கிள்ளிவளவன் ஈ) நெடுங்கிள்ளி
2. கொடை மடம் கொண்ட மன்னன் என்று பரணரால் பாராட்டப்படுபவர்
   அ) பாரி ஆ) ஓரி
   இ) பேகன் ஈ) அதியமான்
3. எண்டேர் செய்யும் தச்சன்
   அ) காரி ஆ) அதியமான்
   இ) நள்ளி ஈ) அண்டிரன்
4. 'நாடா கொன்றோ காடாகொன்றோ' எனும் பாடலமைந்த துறை
   அ) பொருண்மொழிக்காஞ்சி ஆ) பரிசிற்றுறை
   இ) அரசவாகை ஈ) இயன்மொழி
5. கபிலர் பாரிமகளிரை மணந்துகொள்ள வேண்டப்பட்ட மன்னன்
   அ) இளங்கண்டீரக்கோ ஆ) காரி
   இ) விச்சிக்கோ ஈ) ஓரி
6. யாணர் என்ற சொல் உணர்த்தும் பொருள்
   அ) வருவாய் ஆ) திறை
   இ) கொடை ஈ) புதுவருவாய்
7. பல்பூங் கோங்கம் அணிந்த நிலம்

அ) குறிஞ்சி ஆ) முல்லை

இ) மருதம் ஈ) நெய்தல்

8. சான்றோர் செல்வம் என்று மிளைகிழான் நல்வேட்டனர் கூறுவது

அ) அன்பு ஆ) அருள்

இ) அறம் ஈ) பண்பு

9. தித்தனின் காவற்கோட்டைப் போன்ற இடுக்கண் உடையதாகத் தலைவி கூறுவது

அ) களவொழுக்கம் ஆ) கற்பு

இ) பிரிவு ஈ) செலவழுங்கல்

10. 'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்' இத்தொடரால் குறிப்பிடப்படுபவர்

அ) வெற்பன் ஆ) ஊரன்

இ) எயினன் ஈ) இடையன்

11. ஆலத்தூர் கிழார் கூறும் கௌவை என்பதன் பொருள்

அ) காமம் ஆ) களவு

இ) அறத்தொடு நிற்றல் ஈ) அலர்

12. மனையுறை மகளிர்க்கு உயிர்

அ) கற்பு ஆ) குழந்தை

இ) ஆடவர் ஈ) தோழி

13. தலைவன் கொண்டு வரும் பொருள் எதை மீட்காது என தோழி கூறுகிறாள்?

அ) அழகு ஆ) இளமை

இ) நட்பு ஈ) உயிர்

14. 'நும்மொடு துன்பம் துணையாக நாடின்' தமக்கு எது கிடைப்பதாகப் பாலைக்கலி தலைவி கூறுவது

அ) இன்பம் ஆ) துன்பம்

இ) ஏக்கம் ஈ) பெருமிதம்

15. "நின்தொல்கவின் தொலைதல் அஞ்சி என் சொல்வரைத் தங்கினர்" - இக்கூற்றுக்கு உரியவர்

அ) தலைவி ஆ) செவிலி

இ) தோழி ஈ) நற்றாய்

16. பரிபாடல் வையையின் ஏழாம் பாடலை இயற்றியவர்

அ) மையோடக் கோவனார் ஆ) கரும்பிள்ளைப் பூதனார்

இ) நல்லந்துவனார் ஈ) நல்லழிசியார்

17. வையை வெள்ளம் எப்படி ஓடி வருவதாகப் பரிபாடல் குறிப்பிடுகிறது

அ) மேகம் போல் ஆ) அருவிபோல்

இ) பாண்டியனது படையைப்போல் ஈ) கடல் அலைபோல்

18. தைந்நீராடல் பற்றி கூறும் நூல்

அ) கலித்தொகை ஆ) பரிபாடல்

இ) அகநானூறு ஈ) குறுந்தொகை

19. வான் பொய்ப்பினும் தான் பொய்யாதது

அ) வையை ஆ) தாமிரபரணி

இ) ஆன்பொருநை ஈ) காவிரி

20. முட்டாச் சிறப்புடைய நகரம்

அ) உறையூர் ஆ) வஞ்சி

இ) காவிரிபூம்பட்டினம் ஈ) மதுரை

21. நீறு ஆடிய களிறு போல தோன்றுவது

அ) மரக்கலம் ஆ) எருமை

இ) அரண்மனை ஈ) மலை

22. நிலவு அடைந்த இருள் போல இருப்பதாகப் பட்டினப்பாலை கூறுவது

அ) மணற்பரப்பில் கிடக்கும் வலைகள் ஆ) ஆடை

இ) கொடிகள் ஈ) மரக்கலப்பாய்கள்

23. 'காடு கொன்று நாடு ஆக்கியவன்'

அ) இளஞ்சேட் சென்னி ஆ) கரிகாலன்

இ) பெருவிறற்கிள்ளி ஈ) நெடுங்கிள்ளி

24. சாறு அயர் மூதூர் என்பதன் பொருள்

அ) வளமான மூதூர் ஆ) நீர் வளமிக்க ஊர்

இ) போர் நடக்கும் ஊர் ஈ) விழா நடக்கும் மூதூர்

25. மறத்திற்கும் துணையாக இருப்பதாக வள்ளுவர் கூறுவது

அ) அன்பு ஆ) அருள்

இ) ஈகை ஈ) அறம்

26. மறுமையும் இம்மையும் இன்பம் தருவதாக வள்ளுவர் கூறுவது

அ) ஒழுக்கம் ஆ) பண்புடைமை

இ) சிறுமையுள் நீங்கிய இன்சொல் ஈ) பணிவுடைமை

27. தலைவனின் நட்பு எந்நட்பு போல் இருப்பதாக ஐந்திணை எழுபது கூறுகிறது?

அ) சான்றோர் நட்பு ஆ) செவிலி நட்பு

இ) தோழி நட்பு ஈ) தெய்வ நட்பு

28. இடையன் ஊதும் புல்லாங்குழல் தலைவிக்கு எதைக்கொண்டு தாக்குவது போல் உள்ளதாக ஐந்திணை எழுபது கூறுகிறது?

அ) வாள் ஆ) வேல்

இ) அம்பு ஈ) கல்

29. தலைவியின் பசலை நோய்க்கு எப்பருவம் மருந்தாகும் என கண்ணங் கூத்தனார் கூறுகிறார்.

அ) கார்ப்பருவம் ஆ) கூதிர்ப்பருவம்

இ) இளவேனில் ஈ) முதுவேனில்

30. தலைவனைக் காலம் தாழ்த்தாதீர் என்று எது சொல்வதாகத் தலைவிக்குத் தோழி கூறினாள்.

அ) மின்னல் ஆ) இடிக்கும் மேகம்

இ) மலரும் முல்லை ஈ) தோன்றிப்பூ

*********************